# பத்திரிக்கை செய்தி

## கட்டிட வரைபட அனுமதி வழங்க லஞ்சம் வாங்கிய பிளிச்சி பஞ்சாயத்து தலைவர் மற்றும் அவரது கணவர் கோயம்புத்தூர் லஞ்ச ஒழிப்பு துறையினரால் கைது

கோயம்புத்தூர் மாவட்டம் G.N.மில்ஸ் சுப்பிரமணியம்பாளையத்தை சேர்ந்த திரு.குணசேகரன் என்பவரது மகன் G.கார்த்திக் என்பவர் தனது மனைவி பூர்ணிமாவின் பெயரில், கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், பிளிச்சி பஞ்சாயத்திற்குட்பட்ட கோட்டைப்பிரிவு வேலன் நகரில் வாங்கிய இரண்டு வீட்டு மனைகளின் கட்டிட வரைபட அனுமதிக்காக கடந்த 05.09.2022-ம் தேதி மேற்படி பிளிச்சி பஞ்சாயத்து அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்துள்ளார். அதனைத்தொடர்ந்து கடந்த 07.09.2022-ம் தேதி மேற்படி பிளிச்சி பஞ்சாயத்து அலுவலகம் சென்று இரு மனைகளுக்கும் சேர்த்து, அரசு கட்டணமாக ரூ.18,640/- மற்றும் 17.09.2022-ம் தேதி பிளான் அப்ரூவல் கட்டணம் ரூ.21,092/- ஆகிய அரசு கட்டணங்களை செலுத்திவிட்டார். பின்னர் கடந்த 30.09.2022-ம் தேதி மேற்படி பஞ்சாயத்து அலுவலகம் சென்று பிளான் அப்ரூவல் குறித்து பிளிச்சி பஞ்சாயத்தின் தலைவர் திருமதி.சாவித்திரி என்பவரை நேரில் சந்தித்து கேட்ட போது அவர் மேற்படி பிளான் அப்ரூவலை அங்கிருந்த தனது கணவர் ராஜனை பார்த்து வாங்கிக்கொள்ளுமாறு சொல்ல புகார்தாரர் திரு.கார்த்திக் மேற்படி ராஜனிடம் கேட்டபோது அவர் ஒரு வரைபடத்திற்கு ரூ.10,000/- வீதம் இரண்டு வரைபடத்திற்கு ரூ.20,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். ஆனால் வாதி தன்னால் அவ்வளவு பணம் கொடுக்கமுடியாது என்று தனது இயலாமையை தெரிவித்துள்ளார். அதற்கு ராஜன் பணத்தை கம்மி பண்ணமுடியாது என்று சொல்லியுள்ளார். வங்கியில் கடன் பெறுவதற்கு பிளான் அப்ரூவல் கட்டாயம் என்பதனால் மேற்படி திரு.கார்த்திக் 06.10.2022-ம் தேதி பிளிச்சி பஞ்சாயத்திற்கு சென்று மீண்டும் பஞ்சாயத்து தலைவர் திருமதி.சாவித்திரியை சந்தித்து பிளான் அப்ரூவல் குறித்து கேட்டுள்ளார். அப்போது பஞ்சாயத்து தலைவர் திருமதி.சாவித்திரி அவரது கணவர் திரு.ராஜன் ஏற்கனவே லஞ்சமாக கேட்ட பணம்

ரூ.20,000/-ஐ கேட்டுள்ளார். தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என்று கூறியதின் பேரில் மேற்படி திருமதி.சாவித்திரி ரூ.15,000/- கொடுத்து விட்டு பிளான் அப்ரூவலை வாங்கி கொள்ளுங்கள் என்று கறாராக சொல்லிவிட்டார். அப்போது பஞ்சாயத்து தலைவர் திருமதி.சாவித்திரியுடனிருந்த கணவர் திரு.ராஜன் புகார்தாரரை வெளியே அழைத்துகொண்டு வந்து ரூ.15,000/-ஐ தன்னிடம் கொடுத்துவிட்டு பிளான் அப்ரூவலை வாங்கிகொள்ளுமாறு சொல்லியுள்ளார். அப்போது சரி என்று சொல்லிவிட்டு பிளான் அப்ரூவல் பெற ரூ.15,000/- லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத புகார்தாரர் திரு.கார்த்திக், கோயம்புத்தூர் லஞ்ச ஒழிப்பு துறையில் இன்று 07.10.2022-ம் தேதி புகார் செய்ததை தொடர்ந்து வழக்கு பதிவுசெய்யப்பட்டு லஞ்ச ஒழிப்புத்துறையினரின் ஆலோசனையின்பேரில், புகார்தாரர் இன்று பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், பிளிச்சி பஞ்சாயத்து தலைவர் திருமதி.சாவித்திரி என்பவரை அவரது அலுவலகத்தில் சந்திக்க சென்றபோது அவர் அலுவலகத்தில் இல்லை. ஆகையால் புகார்தாரர் அலுவலகத்தின் பெயர் பலகையில் குறிப்பிடப்பட்டிருந்த பஞ்சாயத்து தலைவரின் செல்போன் நம்பரை தொடர்புகொண்டபோது திரு.ராஜன் போனை எடுத்து அவர்கள் துக்ககாரியத்திற்கு சென்றிருப்பதாகவும், பஞ்சாயத்து அலுவலத்திற்கு வந்தபின்னர் புகார்தாரரை கூப்பிடுவதாகவும் தெரிவித்துள்ளார். அதனைதொடர்ந்து இன்று 07.10.2022-ம் தேதி மாலை மேற்படி திரு.ராஜன் புகார்தாரரை பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வரச்சொல்லியதின் பேரில் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு புகார்தாரர் திரு.கார்த்திக் சென்றபோது, ஊராட்சிமன்ற தலைவர் திருமதி.சாவித்திரியுடனிருந்த அவரது கணவர் திரு.ராஜன் என்பவர் புகார்தாரரிடமிருந்து லஞ்சமாக ரூ.15,000/-ஐ கேட்டு வாங்கிய போது மறைந்திருந்த கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களால் எதிரி-1 திருமதி.R.சாவித்திரி, வயது 47, பிளிச்சி ஊராட்சி மற்ற தலைவர் மற்றும் அவரது கணவர் எதிரி-2 திரு.C.ராஜன் வயது 63 ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

**PRESS NOTE**

Panchayat President and her husband arrested by DVAC for demand and receiving bribe

The complainant had applied for obtaining house plan approval in his wife name for two house site plots at Pilichi Panchayat, Periyanayakkampalayam union, Coimbatore and also paid the government fees for both the plan approval. Later on 30.09.2022 the complainant went to the Pilichi Panchay union office to enquire on the status of his petition and met Tmt.Savithri, Panchayat President, Pilichi. She had asked the complainant to meet her husband Tr.Rajan and get the plan approval who was there in the office. When the complainant approached Tr.Rajan he had demanded bribe of Rs.10,000/- for each plan approval and totally Rs.20,000/- bribe. The complainant had expressed that he is not in a position to give so much amount as bribe. Tr.Rajan had refused to reduce the bribe amount. The complainant left the panchayat office. Later, since plan approval was necessary for obtaining loan from bank, the complainant had again went to Pilichi Panchayat union office on 06-10-22 and met Tmt.Savithri, President for which she had reiterated the earlier bribe demanded by her husband and finally told the complainant to give the bribe and get the plan approval. Tr.Rajan who was also present in the office took the complainant out of the office and demanded the complainant to give him Rs.15,000/- bribe amount and get the plan approval. The complainant not willing to give bribe, approached the V&AC detachment Coimbatore and preferred a complaint. On the

complaint an FIR was registered today 07.10.2022 and on the instruction of V&AC officials the complainant went to the Pilichi Panchayat office today 07.10.2022 to meet Tmt.Savithri, Pilichi Panchayat President. She was not there. Hence the complainant contacted the president in her mobile number which was displayed in the office board. Tr.Rajan attended the phone and informed the complainant that he and his wife have gone out for a death condolence and as soon as they reach the Panchayat office they would call him. Accordingly today evening Tr.Rajan contacted the complainant and asked him to come to the Panchayat office. When the complainant went to the Panchayat office, Tr.Rajan who was with the Panchayat President reiterated their demand and received Rs.15,000 as bribe from the complainant. The Coimbatore V&AC officials who were in hiding, rushed to the spot and arrested both the Panchayat President and her husband.